**மக்கள் வங்கி - 2015**

-----------------------------------------

மக்கள் வங்கியினதும் ("வங்கி") வங்கி மற்றும் அதன் துணைக் கம்பனியினதும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்றுக்கள், இலாபநட்டக்கூற்று மற்றும் முற்றுமடங்கிய ஏனைய வருமானக்கூற்றுக்கள், உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றுக்கள், காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இந்தக் கணக்காய்வை மேற் கொள்கையில் பொதுச் சேவையிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் உதவி எனக்கு கிடைத்திருந்தது. துணைக்கம்பனிகளின் நிதிக்கூற்றுக்கள் உரிய துணைக்கம்பனிகளினது உறுப்பினர்களால் நியமிக்கப்பட்ட பொதுச் சேவையிலுள்ள பட்டய கணக்காளர் நிறுவனங்களினால் கணக்காய்வு செய்யப்பட்டன.

வங்கியானது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 5(1) ஆம் பிரிவில் அவருக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தை பயன்படுத்தி 1992 மே 14 ஆந் திகதிய 715 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அப்போதைய நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரின் கட்டளை மூலம் சொல்லப்பட்ட நிதி அதிகாரச்சட்டத்தின் பகுதி II இலுள்ள ஏற்பாடுகளிலிருந்து வங்கி விலக்களிக்கப்பட்டிருந்தது. அமைச்சரவையால் தீர்மானிக்கப்பட்டு 1992 ஏப்ரல் 10 ஆந்திகதிய ஈஏ02/பீசீ/பிபீ/01 ஆம் இலக்க அவரின் சுற்றறிக்கை மூலம் திறைசேரி செயலாளரால் அறிவிக்கப்பட்டவாறு வங்கியானது சகல திறைசேரி மற்றும் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகளிருந்தும் விலக்களிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையானது இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின்படி வழங்கப்படுகிறது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு**

-------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (சபை) பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் வங்கியின் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களைத்

தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம் – வங்கி

மக்கள் வங்கியின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல்களினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### அபிப்பிராயம் – தொகுதி

மக்கள் வங்கியினதும் அதன் துணைக் கம்பனியினதும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றினது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல்களினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 தொகுதி நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

வங்கியின் திரண்ட நிதிக்கூற்றுக்கள் வங்கியின் முக்கிய பகுதியாக இருக்கின்ற உள்நாட்டு வங்கியியல் பிரிவுகள், கடல்கடந்த வங்கியியல் பிரிவு மற்றும் வெளிநாட்டுச் செயற்பாடுகள் என்பவற்றின் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களை கொண்டுள்ளது. தொகுதி நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (எஸ்எல்ஏஎஸ்) இணங்குகின்ற வங்கி, அதன் துணைக்கம்பனிகள் மற்றும் இணைந்த கம்பனிகள் என்பவற்றின் திரண்ட நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைப்பைக் கொண்டுள்ளது. வங்கியானது ஐந்தொகையிலுள்ளவாறு வரையறுத்த பீப்பிள் ரவல்ஸ் (தனியார்) கம்பனியில் 99 சதவீத பங்கு மூலதனம், வரையறுத்த பொது பீப்பிள் லீசிங் அன்ட் பினான்ஸ் கம்பனியில் 75 சதவீத பங்கு மூலதனம், வரையறுத்த பீப்பிள் மேச்சன்ற் பினான்ஸ் பிஎல்சீயில் 50.16 சதவீத பங்கு மூலதனம் மற்றும் வரையறுத்த ஸ்மாற் நெற் லங்கா (தனியார்) இல் 37.3 சதவீத பங்கு முலதனம் என்பவற்றினைக் கொண்டுள்ளது.

ஒவ்வொரு கம்பனி தொடர்பில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கியின் உரிமையாண்மை பின்வருமாறு இருந்தது.

| | நேரடி முதலீடுகள் | | | |
|---|---|---|---|---|
| | 2015 | | 2014 | |
| **துணைக்கம்பனிகள்** | **ரூபா 000** | **சதவீதம்** | **ரூபா 000** | **சதவீதம்** |
| வரையறுக்கப்பட்ட பீப்பிள்ஸ் ரவல்ஸ் (தனியார்) கம்பனி | 4,950 | 99 | 4,950 | 99 |
| பொது வரையறுக்கப்பட்ட பீப்பிள் லீசிங் அன்ட் பினான்ஸ் கம்பனி | 840,958 | 75 | 1,040,958 | 75 |
| பொது வரையறுக்கப்பட்ட பீப்பிள்ஸ் மேச்சன்ற் பினான்ஸ் கம்பனி | 629,858 | 50.16 | - | - |
| **துணைக்கம்பனிகளிலுள்ள மொத்த முதலீடு** | **1,475,766** | | **1,045,908** | |
| **இணைந்த கம்பனிகளின் பெயர்** | | | | |
| பொது வரையறுக்கப்பட்ட பீப்பிள்ஸ் மேச்சன்ற் பினான்ஸ் கம்பனி | - | - | 273,100 | 26.13 |
| வரையறுத்த ஸ்மாட் நெற் லங்கா (தனியார்) கம்பனி | 25,000 | 37.3 | 25,000 | 37.3 |
| **இணைந்த கம்பனிகளிலுள்ள மொத்த முதலீடு** | **25,000** | | **298,100** | |
| கழி:நட்டக்கழிவிற்கான ஏற்பாடு | (25,000) | | (25,000) | |
| வரையறுத்த ஸ்மாட் நெற் லங்கா (தனியார்) கம்பனி | | | | |
| **இணைந்த கம்பனிகளிலுள்ள தேறிய முதலீடு** | **-** | | **273,100** | |

## 2.3. வங்கியின் நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.3.1. இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கம் (எல்கேஏஎஸ்) (எஸ்எல்எவ்ஆர்எஸ்)

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) எல்கேஏஎஸ் 23 – கடன் கிரயங்கள்**

வங்கியானது ஒப்பந்தகாரர்களின் ரூபா 136,436,283 (வரிகளுடன்) கடன் கிரயங்களை மீளாய்வாண்டின் போது வங்கியின் சொத்துக்களின் பகுதியொன்றாக நியமத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக மூலதனமாக்கியிருந்தது. இதன் விளைவால், வங்கியின் சொத்துக்கள் மற்றும் இலாபமானது அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

**(ஆ) எல்கேஏஎஸ் 39 – நிதிக்கருவிகளை இனங்காணல் மற்றும் அளவிடுதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வங்கியானது முதிர்ச்சியடைய வேண்டிய நிதிச்சொத்துக்களின் பெறுமதியை கணிப்பீடு செய்யும் போது விளைதிறனான வட்டிவீதத்தை (ஈஜஆர்) பயன்படுத்துவதற்குப் பதிலாக (ஈஜஆர்) எளிய சராசரி வட்டிவீதம் மற்றும் கூட்டு வட்டிவீதம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு செய்திருந்தது. ஆகையால், காலக்கழிவிடப்பட்ட பெறுமதிக்கும் நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்ட பெறுமதிக்கும் இடையில் ரூபா 44,224,027 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. மேலும், வங்கியானது திறைசேரி முறிகளிற்கான(ரீபீ) வட்டிவருமானத்தை விளைதிறனான வட்டிவீதத்தை (ஈஜஆர்) பயன்படுத்தி இனங்கான்பதற்கு பதிலாக எளிய வட்டிவீத அடிப்படையில் இனங்கண்டிருந்தது. ஆகையால், நியாயப் பெறமதிக்கும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பெறுமதிக்கும் இடையில் ரூபா 71,474,408 வித்தியாசமிருந்தது.

(ii) விற்பனைக்காகவுள்ளதாக (ஏஎவ்எஸ்) வகைப்படுத்தப்பட்ட ரூபா 74,590,000 பெறுமதியான விலைகூறப்படாத பங்குகளிலுள்ள முதலீடுகள் மதிப்பீட்டு முறைமைகளைப் பயன்படுத்தி நியாயப் பெறுமதியில் இனங்காண்பதற்குப் பதிலாக கிரயத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(இ) எஸ்எல்எவ்ஆர்எஸ் 07 – நிதிக்கருவிகளை வெளிப்படுத்தல்**

தொகுதி நிதி இடர் முகாமைத்துவ வெளிப்படுத்தல்கள் தொகுதி நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளாக உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) எல்கேஏஎஸ் 36 – சொத்துக்களின் நட்டக்கழிவு**

(i) தனிப்பட்ட ரீதியான முக்கியமான வாடிக்கையாளர்களை தெரிவு செய்வதற்கான வங்கியின் ஆரம்பமட்டம் ரூபா 25 மில்லியனை விட அதிகமான கடன் கலவையாகும். எனினும், வங்கியானது வாடிக்கையாளர்களின் ஒட்டுமொத்த வங்கிக்கலவையை கருத்திற்கொள்ளவில்லை என கிளை வலையமைப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், ரூபா 25 மில்லியனுக்கு மேலதிகமான தனிப்பட்ட கடன்களுடான வாடிக்கையாளர்களை தனிப்பட்ட முறையிலுள்ள வரையறைகளால் முக்கியமான வாடிக்கையாளர்களாக கருதியிருந்தது. ஆகையால், நட்டக்கழிவானது வங்கியின் கிளை வலையமைப்பிலுள்ள தனிப்பட்ட வாடிக்கையாளர்களின் ஒட்டுமொத்த கடன் கலவைகளை கருத்திற்கொள்ளாமையால் போதுமானதாகவிருக்கவில்லை.

(ii) வங்கியானது தனிப்பட்ட நட்டக்கழிவிற்கான கணிப்பீட்டிற்காக வாடிக்கையாளர்களின் தண்டப்பணங்கள் மற்றும் தாமதக்கட்டணங்களை கருத்திற்கொள்ளவில்லை.

**2.3.2. விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்**

பின்வரும் விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கடன்கள் மற்றும் வருமதிகள், அடகுபிடித்தல் மற்றும் வட்டி மீது பேரேட்டு மீதிகளிலும் முறைமையால் தோற்றிவிக்கப்பட்ட மீதிகளிற்குமிடையில் முறையே ரூபா 358,084,000, 338,802,000 மற்றும் 3,107,928,000 வித்தியாசங்கள் தொங்கலில் அவதானிக்கப்பட்டன.

(ஆ) சில்வர் லேக் ஒருங்கிணைந்த வங்கியியல் முறைமை (எஸ்ஜபீஎஸ்) தரவு களஞ்சியத்தில் காட்டப்பட்ட நிலையான வைப்புக்கள் மற்றும் சேமிப்பு கணக்குகள் மீதிக்கும் மற்றும் பொதுப் பேரேட்டில் காட்டப்பட்ட மீதிகளுக்கும் இடையில் ரூபா 5,842,739 ஆன வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டது.

**2.3.3. தொங்கல் கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வங்கியானது மக்கள் வங்கியின் தலைமை அலுவலகக் கட்டிடத்தின் பேஸ் லிப்ரிங் செயற்திட்டத்திற்காக 2011 இலிருந்து 2016 வரை ரூபா 320,809,839 தொகையை செலவழித்திருந்ததுடன் இந்தக்கிரயமானது வருமானத்திற்கு எதிராக பதிவழிக்கப்படாமல் தொங்கல் கணக்கிலிருந்தது.

(ஆ) கடன்கள் மற்றும் வருமதிகளின் கீழ் ஏனைய கடன்களாக வகைப்படுத்தப்பட்ட 04 நீண்டகால நிலுவையாகவுள்ள இணக்கஞ்செய்யப்படாத தொங்கலகணக்குகளில் 2015 திசெம்பர் 31 இலும் தீர்ப்பனவு செய்யாமல் ரூபா 51,716,168 தொகை மீதமாகவிருந்தது.

**2.3.4. கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

ரூபா 59,799,479 பெறுமதியான 21 குத்தகையுரிமையாளர்களின் மூல குத்தகை உடன்படிக்கைகள் கணக்காய்விற்காக கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

**2.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கான தொடர்பு** | **இணங்காமை** |
| --- | --- |
| (அ) 1961 இன் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி அதிகாரச் சட்டம் | (i) வங்கியின் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் 20,000,000 சாதாரண பங்குகளிற்கு வரையறுக்கப்பட்டிருந்தது. வங்கியானது 999,960 பங்குகளை மாத்திரமே வழங்கியிருந்த போதிலும் அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனத்தை விஞ்சிய 143,040,000 பங்குகளிற்கு ரூபா 7,152 மில்லியன் தொகையான மூலதன செலவு பங்கீடு இருந்தது. எவ்வாறாயினும், மக்கள் வங்கியினுடைய அதிகாரச்சட்டத்தை திருத்துவதன் மூலம் இன்னமும் அதிகரிக்கப்படாத அனுமதிக்கப்பட்ட மூலதனக் கணக்காக பங்கீடு செய்யப்பட காத்திருக்கும் மூலதனக் கணக்கில் ரூபா 7,152 மில்லியன் தொகை இடம் பெற்றிருந்தது. |

| | | |
|---|---|---|
| | (ii) | வங்கியானது ரூபா 10,000 மில்லியன் பெறுமதியான தொகுதிக்கடன்களை மக்கள் வங்கி ஓய்வூதிய நிதியத்திற்கு நிதி அமைச்சின் அனுமதியில்லாமல் வழங்கியிருந்தது. |
| (ஆ) | 2005 ஏப்ரல் 12 ஆம் திகதிய 02/17/402/0073/001 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டல்கள் | சகல அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளும் 2007 இறுதியளவில் ரூபா 2,500 மில்லியன் வரை அவர்களுடைய மூலதனத்தை அதிகரிப்பதற்கு வேண்டப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் இலங்கை மத்திய வங்கியானது அத்தேவைப்பட்ட மூலதனத்தை எய்தியிருக்காத சில வங்கிகளிற்கு 2006 இறுதியளவில் குறைந்தது 50 சதவீதத்தால் தொகையை உயர்த்துவதற்கு அனுமதித்திருந்ததுடன், 2007 இறுதியளவில் ரூபா 2,500 மில்லியன் முழுமையாக அடைவதற்கு இருந்தது. இருந்தபோதிலும், வங்கியானது தேவைப்பட்ட மூலதனத்தை அடைந்திருக்காததுடன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலவிய அப்பற்றாக்குறை ரூபா 2,450 மில்லியன் ஆகும். |
| (இ) | 2009 இன் 18 ஆம் இலக்க நிதி(திருத்திய) அதிகாரச்சட்டம் | வங்கியானது தனது 07 கிளைகளுடன் தொடர்புடைய செயற்திட்டங்களின் நிர்மாணங்கள் தொடர்பாக நிர்மாண கைத்தொழில் உத்தரவாத தீர்வையாக (சீஐஜீஎவ்எல்) இறைவரி திணைக்கள ஆணையாளருக்கு ரூபா 9,588,070 தொகையை செலுத்தியிருக்கவில்லை. |
| (ஈ) | 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தை கட்டியெழுப்பும் வரி (என்பீரீ) | நிர்மாண ஒப்பந்தகாரர் என்பீரீயிலிருந்து வரிவிலக்கு செய்யப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தகாரர்களுக்கு ரூபா 28,806,382 மற்றும் 3,403,620 தொகை முறையே பெறுமதி சேர் வரி மற்றும் (வற்) என்பீரி யாக செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1. நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வங்கி மற்றும் தொகுதியின் செயற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான வங்கி மற்றும் தொகுதியின் முறையே 17,231 மில்லியன் மற்றும் ரூபா 21,627 மில்லியன் நேரொத்த வரிக்கு முந்திய தேறிய இலாபத்துடன் ஒப்பிடும் போது முறையே ரூபா 19,520 மில்லியன் மற்றும் ரூபா 24,121 மில்லியன் வரிக்கு முந்திய தேறிய இலாபத்தை விளைவித்திருந்தது. ஆகையால் வங்கி மற்றும் தொகுதிகளின் நிதிசார் விளைவுகளில் முறையே ரூபா 2,289 மில்லியன் மற்றும் ரூபா 2,494 மில்லியன் முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. வியாபாரத்திலிருந்தான வட்டிவருமானம் மற்றும் தேறிய மிகைகளின் அதிகரிப்பு என்பன இதற்கான பிரதான காரணமாகவிருந்தது.

### 3.2 வங்கியின் பெறுமதி சேர்க்கை

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான மற்றும் முன்னைய நான்கு ஆண்டுகளிற்கான வங்கியின் பெறுமதி சேர்க்கை பின்வருமாறுள்ளன.

| | 2015<br>ரூபா.<br>மில்லியன் | 2014<br>ரூபா.<br>மில்லியன் | 2013<br>ரூபா.<br>மில்லியன் | 2012<br>ரூபா.<br>மில்லியன் | 2011<br>ரூபா.<br>மில்லியன் |
|---|---|---|---|---|---|
| **பெறுமதி சேர்க்கை** | | | | | |
| வங்கி சேவைகளை வழங்குவதன் மூலம் உழைக்கப்பட்ட வருமானம் | 95,454 | 86,078 | 111,859 | 87,367 | 62,796 |
| சேவைகளின் கிரயம் | (55,932) | (61,802) | (81,525) | (58,259) | (38,596) |
| வங்கி சேவைகளால் சேர்க்கப்பட்ட பெறுமதி | 39,522 | 24,276 | 30,334 | 29,108 | 24,200 |
| வங்கியல்லா வருமானம் | 8,195 | 10,299 | 8,597 | 7,410 | 6,030 |
| அறவிடமுடியாக்கடனிற்கான ஏற்பாடு | (3,740) | - | - | - | - |
| நிதிச்சொத்துக்கள் மீதான தேறிய நட்டக்கழிவு ஏற்பாடு | - | 1,430 | (13,716) | (3,874) | (971) |
| காணி மற்றும் கட்டிடம் மீதான மீள்மதிப்பீட்டு மிகை | - | - | 5,413 | | |
| | **43,977** | **36,005** | **30,628** | **32,644** | **29,259** |
| **ஊழியர்களுக்காக ஒதுக்கப்பட்ட பெறுமதி** | | | | | |
| சம்பளங்கள், கூலிகள் மற்றும் ஏனைய நன்மைகள் | 17,378 | 14,005 | 12,385 | 13,505 | 10,084 |
| **அரசாங்கத்திற்கு** | | | | | |
| முறிகள் மீது இலங்கை அரசாங்கத்திற்கு செலுத்தப்பட்ட பங்குஇலாபம் | 220 | 220 | 220 | 201 | - |
| திறைசேரிக்குரிய விசேட தீர்வை | 3,000 | 6,000 | 4,500 | 4,500 | 4,500 |
| உழைக்கும் போதான வரி | 315 | 144 | 289 | 373 | 25 |
| வருமான வரி | 6,922 | 3,012 | 2,816 | 4,355 | 5,154 |
| வற் | 5,276 | 3,857 | 1,953 | 2,679 | 2,681 |
| ஏனைய நேரில் வரிகள் | 1,101 | 892 | 261 | 203 | 130 |
| **விரிவாக்கலிற்கும் வளர்ச்சிக்கும்** | | | | | |
| உழைத்த வருமானம் | 8,795 | 6,933 | 7,332 | 6,116 | 5,657 |
| பெறுமானத்தேய்வு/ காலக்கழிவு | 970 | 942 | 872 | 712 | 1,028 |
| **மொத்த பெறுமதிச் சேர்க்கை** | **43,977** | **36,005** | **30,628** | **32,644** | **29,259** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அ) வங்கிச்சேவைகளை வழங்குவதன் மூலம் வங்கியின் பெறுமதிச் சேர்க்கை 2014 இல் ரூபா 86,078 மில்லியனிலிருந்து 2015 இல் 95,454 மில்லியனிற்கு 11 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

ஆ) 2015 ஆம் ஆண்டில், ஊழியர்களுக்கு, அரசாங்கத்திற்கு மற்றும் விரிவாக்கலிற்கும் வளர்ச்சிக்குமான பெறுமதி ஒதுக்கீடு முறையே 24 சதவீதம் 19 சதவீதம் மற்றும் 24 சதவீதத்தால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அதிகரித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

#### 3.2.1 இலாபத்தன்மை

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான பல்வேறு கட்டங்களில் வங்'கி மற்றும் தொகுதியின் நிதிசார் விளைவுகளின் பொழிப்பை பின்வரும் அட்டவணை தருகின்றது.

**திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு**

| | 2015 | | 2014 | |
|---|---|---|---|---|
| | வங்கி | தொகுதி | வங்கி | தொகுதி |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| வட்டி வருமானம் | 92,403 | 110,278 | 84,480 | 104,181 |
| வட்டிச் செலவினம் | (48,732) | (56,021) | (54,362) | (64,211) |
| **தேறிய வட்டி வருமானம** | 43,671 | 54,257 | 30,118 | 39,970 |
| ஏனைய வருமானம் | 11,071 | 13,378 | 11,776 | 14,338 |
| **செயற்பாட்டு வருமானம்** | **54,742** | **67,635** | **41,894** | **54,308** |
| கடன்கள் மற்றும் ஏனைய நட்டங்களிற்கான இழப்பீடு | (3,740) | (5,168) | 1,430 | 118 |
| தேறிய செயற்பாட்டு வருமானம் | 51,002 | 62,467 | 43,324 | 54,426 |
| செயற்பாட்டுச் செலவினம் | (25,633) | (31,975) | (22,455) | (28,800) |
| பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரிக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம் | 25,369 | 30,492 | 20,869 | 25,626 |
| நிதிச் சேவைகள் மீதான பெறுமதிசேர் வரி மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரி | (5,849) | (6,371) | (3,638) | (3,979) |
| **பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரிக்கு பின்னரான செயற்பாட்டு இலாபம்** | **19,520** | **24,121** | **17,231** | **21,627** |
| இணைந்த கம்பனிகளின் இலாப/ (நட்டப்) பங்கு | - | - | - | (20) |
| **வரிக்கு முன்னரான இலாபம்** | **19,520** | **24,121** | **17,231** | **21,627** |
| வரிச் செலவினம் | (6,922) | (9,053) | (3,012) | (4,674) |
| **ஆண்டிற்கான இலாபம்** | **12,598** | **15,068** | **14,219** | **16,953** |

### 3.3.2 முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய நான்கு ஆண்டுகளிற்கான சில முக்கியமான விகிதங்கள் கீழே தரப்படுகின்றன.

| | | இலங்கை மத்திய வங்கி நியதிகள் | உள்ளபடியானது | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | 2015 | 2014 | 2013 | 2012 | 2011 |
| | | | % | % | % | % | % |
| (அ) | மூலதன போதுமை விகிதம் (தட்டு 1) | 5.00 | 9.9 | 10.9 | 10.4 | 9.8 | 9.6 |
| (ஆ) | மூலதன போதுமை விகிதம் (தட்டு 1 + தட்டு 2) | 10.00 | 12.5 | 14.3 | 15.0 | 14.0 | 14.8 |
| (இ) | சொத்துக்களின் மீதான வருவாய் | - | 1.8 | 1.8 | 1.1 | 2.0 | 2.6 |
| (ஈ) | மொத்த முற்பணங்களிற்கான செயற்பாடற்ற முற்பணங்கள் | - | 2.4 | 3.2 | 5.3 | 2.8 | 3.4 |
| (உ) | திரவ விகிதம் | | | | | | |
| | -உள்நாட்டு வங்கியியல் பிரிவு | - | 25.9 | 30.3 | 25.2 | 21.8 | 21.5 |
| | -வெளிநாட்டு நாணய வங்கியியல் பிரிவு | - | 21.7 | 21.8 | 22.3 | 21.8 | 24.0 |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 கிளைகளின் செயலாற்றல்

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 346 கிளைகளில் 07 கிளைகள் மீளாய்வாண்டிற்காக ரூபா 102 மில்லியன் மொத்த நட்டத்தை பதிவு செய்திருந்த அதேநேரம் 339 கிளைகள் மீள்ஒதுக்கப்பட்ட செலவினங்களிற்கு முன்னர் ரூபா 14,962 மில்லியன் மொத்த இலாபத்தை பதிவுசெய்வதற்கு இயலக்கூடியதாக இருந்தது. இதற்கிணங்க, 346 கிளைகளின் தேறிய இலாபம் முன்னைய ஆண்டிற்கான ரூபா 9,035 மில்லியன் தேறிய நட்டத்திற்கு மேலாக மீள்ஒதுக்கப்பட்ட செலவினத்திற்கு முன்னர் ரூபா 14,860 மில்லியன் ஆக இருந்தது. ஆதலால், கிளைகளின்ழ நிதிசார் விளைவுகளில் ரூபா 5,825 மில்லியன் அல்லது 64 சதவீத முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வங்கியின் வலய வாரியான கிளை வலையமைப்பு மற்றும் அவற்றினுடைய இலாபத்தன்மை என்பன கீழே தரப்படுகின்றன.

| வலயம் | கிளைகளின் எண்ணிக்கை | இலாபம்/ (நட்டம்) 2015 | 2014 | அதிகரிப்பு/ (குறைவு) |
|---|---|---|---|---|
| ------------ | ---------------- | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| மத்திய வலயம் | 43 | 1,547 | 885 | 662 |
| கிழக்கு வலயம் | 30 | 701 | (242) | 943 |
| வட மத்திய வலயம் | 26 | 901 | 502 | 399 |
| தெற்கு வலயம் | 41 | 1,336 | 845 | 491 |
| சப்ரகமுவ வலயம் | 32 | 990 | 784 | 206 |
| மேல் மாகாண வலயம் I | 58 | 4,416 | 3,425 | 991 |
| மேல் மாகாண வலயம் II | 39 | 2,390 | 1,473 | 917 |
| வயம்ப வலயம் | 31 | 1,338 | 905 | 433 |
| வடக்கு வலயம் | 21 | 438 | (61) | 499 |
| ஊவா வலயம் | 25 | 803 | 519 | 284 |
| **மொத்தம்** | **346** | **14,860** | **9,035** | **5,825** |

## 4.2. மனித வளங்கள் முகாமைத்துவம்

பொது முகாமையாளர் , சந்தைப்படுத்தல் தலைவர் , சிரேஸ்ட பிரதம பொது முகாமையாளர் (இடர் முகாமைத்துவம்) மற்றும் திறைசேரி மற்றும் முதலீட்டு வங்கித் தலைவர் போன்ற வங்கியின் முக்கிய பதவிகள் 9 வருடங்கள் தொடக்கம் 15 வருடங்கள் வரையிலான குறிப்பிட்ட காலப்பகுதிக்கான ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்பட்டிருந்தனர். ஒப்பந்த அடிப்படையில் வேலைக்கமர்த்தப்பட்ட முகாமைத்துவ நிறைவேற்றுனர்கள் உடன்படிக்கைகளை மீளபுதுப்பிதன் மூலம் அவர்களுடைய பதவிகளில் காலத்திற்கு காலம் பதவியுயர்த்தப்பட்டிருந்தனர். எனினும்இ அத்தகைய பதவியுயர்விற்கான செய்முறை கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.3. கடன்கள் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) செயற்பாடற்ற கடன்கள் (என்பிஎல்)

i. 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 5 மில்லியனை விஞ்சிய 794 செயற்பாடற்ற கடன்கள் (என்பிஎல்) மற்றும் 44 செயற்பாடற்ற மேலதிகப்பற்றுக்கள் போன்றவற்றின் மொத்த நிலுவையாகவுள்ள பெறுமதி முறையே ரூபா 11,335,713,635 மற்றும் ரூபா 650,103,850 ஆகவிருந்தது.

ii. 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தவணைக்கட்டணம் ஒன்றினையாவது செலுத்தாத 19 கிளைகளிலுள்ள ஒரு மில்லியனை விட அதிகமாகவுள்ள 67 கடன்களின் நிலுவையாகவுள்ள மீதிகளின் பெறுமதி ரூபா 456,577,544 ஆகவிருந்தது.

iii. அரச உடமையாக்கப்பட்ட முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட கடன்கள் நீண்டகாலத்திற்கு என்பிஏ பிரிவிலிருந்தது. 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவையாகவுள்ள மீதி ரூபா 146,181,320 ஆகும். (ரூபா 108,331,791 மூலதனத்தையும் ரூபா 37,849,529 வட்டியையும் ஒன்று சேர்த்து)

iv. 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பிரதான பத்து வாடிக்கையாளர்களின் செயற்பாடற்ற கடன்கள் மற்றும் வங்கி மேலதிக பற்றுக்கள் முறையே ரூபா 7,454,390,748 மற்றும் ரூபா 408,468,334 கூட்டுமொத்தத் தொகையாகும்.

v. மீளாய்வாண்டின் போது ரூபா 42,349,646 தொகையான நிலுவையாகவிருக்கின்ற கடன்கள் மற்றும் முற்பணங்கள் தொடர்பான மூலதனம் மற்றும் வட்டி பதிவழிக்கப்பட்டிருந்தது.

vi. 04 வாடிக்கையாளர்களுக்கு 27 கடன் வசதிகளை கூட்டிணைந்த வங்கியியல் பிரிவு வழங்கியிருந்ததுடன் பின்னர் இது செயற்பாடற்றதாக வகைப்படுத்தப்பட்டிருந்தது. 2015 மே இறுதியிலுள்ளவாறான ரூபா 18,840,825 மற்றும் யூஎஸ்டி 251,235 நிலுவையாகவுள்ள மீதியானது அறவிடப்படாமல் நிலுவையாகவிருந்தது. எனினும், வங்கியானது அத்தகைய மீதிகளை அறவிடுவதற்கு திருப்திகரமான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

vii. கூட்டிணைந்த வங்கியியல் பிரிவானது 11 வியாபார நிதி வசதிகளையும் நிரந்தர வங்கி மேலதிகப்பற்றையும் (பீஓடி) குறிப்பிட்ட வாடிக்கையாளருக்கு வழங்கியிருந்ததுடன் 2015 ஏப்ரல் 25 இல் இது செயற்பாடற்றதாக வகைப்படுத்தப்பட்டிருந்தது. 2015 மே 12 இல் உள்ளவாறான ரூபா 6,653,548 மூதனத்தையும் ரூபா 10,781,234 வட்டியையும் ஒன்றுசேர்த்து ரூபா 17,434,782 நிலுவை மீதியிருந்தது. கடன்களின் அடமகனம் செய்யப்பட்ட சொத்துக்களின் வலியுறுத்தப்பட்ட விற்பனைப் பெறுமதி (எவ்எஸ்வி) 2011 ஒக்தோபர் 24 இல் மேற்கொள்ளப்பட்ட இறுதி மதிப்பீட்டின் பிரகாரம் 2002 இலிருந்து 2011 வரைக்கும் ரூபா 1,500,000 ஆல் குறைவடைந்திருந்தமையால் நிலுவையாகவுள்ள மொத்த மூலதன நிலுவை மீதி ரூபா 2,153,548 சொத்தின் தற்போதைய விற்பனைப் பெறுமதியை விஞ்சியிருந்தது.

viii. கடல் கடந்த வங்கியியல் பிரிவானாது 04 வாடிக்கையாளர்களுக்கு பின்வரும் 13 வசதிகளை வழங்கியதுடன் பின்னர் அது செயற்பாடற்றதாக வகைப்படுத்தப்பட்டிருந்தது. அத்தகைய வசதிகள் 2015 நவம்பர் 03 இல் உள்ளவாறானன ரூபா 228,449,656 (ரூபா 138.50 இல் யூஎஸ்டி 1,649,456) மொத்த நிலுவை மீதி அறவிடப்படாமல் மீதியாகவிருந்ததுடன் வங்கியானது நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

| வங்கி | வசதிகளின் எண்ணிக்கை | காலப்பகுதி | மொத்தமாக வழங்கப்பட்ட தொகை | 2015 நவம்பர் 03 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
|---|---|---|---|---|
| --------------- | ----------- | ------------------ | ---------------- | --------------- |
| | | | யூஎஸ்டி | யூஎஸ்டி |
| ஏ | 02 | 2012 | 250,000 | 308,595 |
| பீ | 09 | 2013-2014 | 138,400 | 100,211 |
| சீ | 01 | 2012 | 130,000 | 78,031 |
| டி | 01 | 1997 | 1,500,000 | 1,162,619 |
| **மொத்தம்** | **13** | | **2,018,400** | **1,649,456** |

ix. கடல்கடந்த வங்கிப்பிரிவானது குறிப்பிட்ட கம்பனிக்கு 42 வசதிகளை வழங்கியிருந்ததுடன் 2012 செப்தெம்பர் 13 இல் இது செயற்பாடற்றதாக வகைப்படுத்தப்பட்டிருந்தது. 2015 நவம்பர் 03 இல் உள்ளவாறான ரூபா 360,325,147 (ரூபா 138.50 இல் யூஎஸ்டி 2,599,985) மொத்த நிலுவை மீதிகள் அறவிடப்படாமல் மீதியாகவிருந்தது. (யூஎஸ்டி 2,150,140 மூலதனத்தையும் யூஎஸ்டி 449,845 வட்டி மற்றும் ஏனைய கட்டணங்களையையும் ஒன்று சேர்த்து யூஎஸ்டி 2,599,985 மொத்த நிலுவை மீதி)

வாடிக்கையாளர்களின் மூலதன நிலுவை மீதியானது அடமானம் செய்யப்பட்ட சொத்தின் வலியுறுத்தப்பட்ட விற்பனைப் பெறுமதியை (எவ்எஸ்வி) ரூபா 122.98 மில்லியனால் ( 297.98 மில்லியன் – 175 மில்லியன்) விஞ்சியிருந்தது. வங்கியின் கடன் செய்முறை கைநூலின் 6 ஆம் பிரிவை (4.6.11) மீறுவதன் மூலம் நிறைவேற்றுக் கடன் குழுவின் அங்கீகாரத்துடன் எவ்எஸ்வியின் 75 சதவீத எல்லையை விஞ்சி வங்கியானது வசதிகளை வழங்கியிருந்தது.

மேற்குறிப்பிடப்பட்ட கம்பனியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2009 இலிருந்து 2012 வரை முக்கியமான தேறிய நட்டத்தை பதிவுசெய்திருந்த போதிலும் கிளையானது வாடிக்கையாளர்களின் கடன் செலுத்தும் தகுதியை மதிப்பிடாமல் கடன் வசதிகளை வழங்கியது.

(x) கடல் கடந்த வங்கிப்பிரிவானது மொத்தக்கடனை வழங்கியிருந்ததுடன் வங்கி மேலதிகப்பற்று மற்றும் 66 வியாபார நிதி வசதிகள் 1995-2007 காலப்பகுதியின் போது கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. 2015 ஒக்தோபர் 31 இல் உள்ளவாறான அத்தகைய வசதிகளின் ரூபா 761,051,545 (ரூபா 138.50 இல் யூஎஸ்டி 5,494,957 ) மூலதன நிலுவை மீதி அறவிடப்படாமலிருந்தது. இத்தகைய வசதிகள் பிணைகளை பெறாமல் வழங்கப்பட்டிருந்தமையால் அறவீடானது சந்தேகத்திற்குரியதாகவுள்ளது.

**(ஆ) போதிய பிணைகளில்லாமல் வழங்கப்பட்ட கடன்கள்**

கூட்டிணைந்த வங்கிப் பிரிவானது போதிய பிணைகளைப் பெற்றுக்கொள்ளாமல் 05 வசதிகளை வழங்கியிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மூலதன நிலுவை மீதி ரூபா 33,202,964,594 ஆகவிருந்தது.

**(இ) வங்கியின் பிரதான 25 வாடிக்கையாளர்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளவற்றில் தெரிவு செய்யப்பட்ட செயற்பாடற்ற கடன்கள்**

---

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒல்கொத்த மாவத்தையிலுள்ள வங்கியின் கிளையானது கம்பனிக்கு 06 கடன் வசதிகளை வழங்கியிருந்ததுடன் பின்னர் அத்தகைய கடன்கள் செயற்பாடற்றதாக வகைப்படுத்தப்பட்டிருந்தது. 2015 ஒக்தோபர் 20 இல் உள்ளவாறான அத்தகைய வசதிகளின் ரூபா 681,293,929 மொத்த நிலுவை மீதிகள் (ரூபா 105,963,563 மூலதனத்தையும் ரூபா 575,330,366 வட்டி மற்றும் ஏனைய கட்டணங்களையையும் ஒன்று சேர்த்து) அறவிடப்படாமலிருந்தது.

நகர அபிவிருத்தி அதிகாரசபையால் (யூடிஏ) உடமையாக்கப்பட்ட மேற்குறிப்பிடப்பட்ட சொத்தின் ஏழு மாடி வர்த்தக கட்டிடத்தை கட்டுவதற்கு வாடிக்கையாளர்கள் கம்பனியை உருவாக்கியிருந்ததுடன் அதனுடைய குத்தகை உடன்படிக்கை உரிமைகள் வங்கிக்கு அடமானம் செய்யப்பட்டிருந்ததது. நிர்மாணத்திலுள்ள காலதாமதம், வங்கிக்கு கடன்கள் மீள்கொடுப்பனவுக்ள காலதாமதம் மற்றும் குத்தகைக் கட்டணங்களின் கொடுப்பனவுகளிலுள்ள காலதாமதம் போன்ற காரணங்களால் யூடிஏயானது குத்தகை உரிமையைபப பெற்றிருந்தது. நீதிமன்ற தலையீடு மற்றும் யூடிஏயின் மறுப்புக்களால் மேற்குறிப்பிடப்பட்ட வசதிகளின் 2015 ஒக்தோபர் 31 இல் உள்ளவாறான ரூபா 681,293,929 மொத்த நிலுவை மதிதியை அறவிடுவதற்கு வங்கியானது தவறியிருந்தது. ஆகையால் வங்கியானது மேற்குறிப்பிடப்பட்ட கடன்களிலிருந்து எதிர்காலத்தில் பாரிய நட்டத்தை ஏற்படுத்தக்கூடும்.

(ii) எம்பிலிப்பிற்றியவிலிலுள்ள கிளையால் கம்பனிக்கு மூன்று கடன் வசதிகள் வழங்கப்பட்டதுடன் அதன் விளைவால் கம்பனியானது கருத்திற்கொள்ள வேண்டிய எதையும் செலுத்தாமல் அரசாங்கத்தால் உடமையாக்கப்பட்டது. கடன்களின் மீள்கொடுப்பனவு நிறுத்தப்பட்டதுடன் வசதிகளானது என்பீஎல் வகைப்படுத்தலுக்கு மாற்றப்பட்டிருந்தது. 2015 ஒக்தோபர் 20 இல் உள்ளவாறு அத்தகைய வசதிகளின் ரூபா 270,159,085 (ரூபா 153,802,366 மூலதனத்தையும் ரூபா 116,356,719 வட்டி மற்றும் ஏனைய கட்டணங்களையையும் ஒன்று சேர்த்து) மொத்த நிலுவை மீதீகள் அறவிடப்படாமலிருந்தது.

(iii) குழுக்கம்பனிகளுக்கு 1994 -1997 காலப்பகுதியின் போது பல சீஜஎவ் இலக்கங்களின் கீழ் வழங்கப்பட்ட ரூபா 3,030 மில்லியன் தொகையான ஐம்பத்தி நான்கு கடன் வசதிகள் செயற்பாடற்ற வகைப்படுத்தலுக்கு மாற்றப்பட்டிருந்த 2015 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறான அறவிடப்படாமலிருந்த அத்தகைய வசதிகளின் மொத்த நிலுவை மீதிகள் ரூபா 19,875,107,361 ஆகும். (ரூபா 3,030,441,658 மூலதனத்தையும் ரூபா 16,844,665,702 வட்டி மற்றும் ஏனைய கட்டணங்களையையும் ஒன்று சேர்த்து)

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- வங்கியால் தலைமைக் கம்பனிக்கு வழங்கப்பட்ட ரூபா 165 மில்லியன் அண்ணளவான வங்கி மேலதிகப்பற்று வசதிகளை உறுதி செய்வதற்காக பெறப்பட்ட 04 நகர்வற்ற அடமானச் சொத்துக்களின் மீது வழமையான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. கொல்லுப்பிற்றியவிலுள்ள மேற்கூறப்பட்ட சொத்தின் பறற் எக்சிகியூற் (Parate execute) அனுமதியை யூடிஏ கொடுக்கவில்லை. சொத்தினை தேறச்செய்வதற்கு வங்கி தவறியிருந்தது. வங்கியானது நுவரெலியாவிலுள்ள சாத்தினை சுவீகரித்திருந்த போதிலும் வங்கியால் தொடுக்கப்பட்ட வெளியேற்றுகை வழக்கிற்கு எதிரான மறுப்புக்களை வாடிக்கையாளர் தொடுத்திருந்ததுடன் வங்கியானது பெறுமதி தேறச்செய்வதற்கு தவறியிருந்தது. மேலும்,ஹெண்டவற்றிலுள்ள சொத்தானது அத்தகைய சொத்து ஏனைய தரப்பினருக்கு தவறாக மாற்றப்பட்டமையால் தேறப்படவில்லை.

- குழுக்கம்பனிகளின் நிலுவையாகவுள்ள மீதிகளை அறவிடுதலுடன் தொடர்பாக அதிக எண்ணிக்கையான வழக்குகள் தொடரப்பட்டிருந்தது. பிரதான பொது முகாமையாளரின் அறவீடுகள் இன் 2015 மார்ச் 13 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் , 2006-2015 காலப்பகுதியின் போது சட்டச்செலவினங்களாக வங்கியானது ரூபா 28.6 மில்லியனை அண்ணளவாக செலவழித்திருந்தது. எனினும;, வங்கியானது கம்பனிக்கு சொந்தமான எந்த சொத்தினை தீர்மானிப்பதற்கும் தவறியிருந்தது.

- வங்கியானது குழுக்கம்பனிகளுக்கு பிணைகளை முறையான மதிப்பீடு செய்யாமல் மற்றும் வாடிக்கையாளர் கடன் செலுத்தும் திறமையை கருத்திற்கொள்ளாமல் கடன்வசதிகளை உதாசீனமாக வழங்கியிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அதனால் எதிர்காலத்தில் வங்கிக்கு பாரிய நட்டத்தை எதிர்கொள்ள ஏற்படுத்தும் அளவுக்கு பாதிக்கும்.

(iv) 1989-2001 காலப்பகுதியின் போது பல சீஜஎவ் இலக்கஙங்களின் கீழ் வேறொரு குழுக்கம்பனிகளுக்கு ரூபா 151,155,182 தொகைாய கடன் வசதிகளை வழங்கியிருந்ததுடன் பின்னர் இது செயற்பாடற்ற வகைப்படுத்தலுக்கு மாற்றப்பட்டிருந்தது. இதனால் வங்கி இடைநிறுத்தலினால் தொழிற்சாலை மூடப்பட்டிருந்ததுடன் அத்தகைள வசதிகளின் 2015 ஒக்தோபர் 22 இல் உள்ளவாறான மொத்த நிலுவை மீதிகள் ரூபா 797,274,233 (ரூபா 143,436,201 மூலதனத்தையும் ரூபா 653,838,032 வட்டி மற்றும் ஏனைய கட்டணங்களையையும் ஒன்று சேர்த்து) ஆகும். வங்கியானது 1999 மற்றும் 2000 இல் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட மேற்குறிப்பிடப்பட்ட வசதிகளில் 02 மேலதிகப்பற்று வசதிகளை கடன் மீள் செலுத்தும் இயலுமையை கருத்திற்கொள்ளாமல் வழங்கியிருந்நதுடன் அவ்நேரம் கடன் செலுத்துவோர் கறுப்புப் பட்டியலிடப்பட்ட வாடிக்கையாளர்களாக வந்தனர். 2015 ஒக்தோபர் 22 இல் உள்ளவாறான அத்தகைய 02 மேலதிகப்பற்று வசதிகிளன் மொத்த நிலுவை மீது ரூபா 1,618,643 ஆகும்.

(v) வங்கியானது கம்பனிக்கு நிதி வசதிகளை வழங்கியிருந்ததுடன் அதன் பின்னர் அது செயற்பாடற்றதாக வகைப்படுத்தப்பட்டது. 2015 ஒக்தோபர் 20 இல் உள்ளவாறான ரூபா 2,519,341,759 (ரூபா 351,053,992 மூலதனத்தையும் ரூபா 2,168,287,769 வட்டி மற்றும் ஏனைய கட்டணங்களையையும் ஒன்று சேர்த்து) மொத்த மூலதன நிலுவை மீதி தற்போதைய விற்பனைப் பெறுமதி (எவ்எஸ்பி) மற்றும் எல்லை கணக்கு மீதியையும் ரூபா 2,150,541,759 ஆல் விஞ்சியிருந்தது.

(vi) பொதுதிறைசேரியால் சமர்ப்பிக்கப்பட்ட உத்தரவாதத்தின் மீது ரஸ்யாவிற்கு தேயிலையை ஏற்றுமதி செய்வதற்காக வங்கியால் ரூபா 351 மில்லியன் கடனை கம்பனி வழங்கியிருந்தது. அத்தகைய வசதிகளில் ரூபா 1,967,320,452 கூட்டுத்தொகையான தொகையொன்று (ரூபா 351,030,187 மூலதனத்தையும் ரூபா 1,616,290,265 வட்டி மற்றும் ஏனைய கட்டணங்களையையும் ஒன்று சேர்த்து) 2015 ஒக்தோபர் 20 இல் உள்ளவாறு அறவிடப்படாமலிருந்தது. திறைசேரியானது முன்காப்பீடு 1996 ஆகஸ்ட் 08 ஆம் திகதியிலிருந்து காலவாகியிருந்த போதிலும் இது மீளப்புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

நிதி அமைச்சானது கடனிலிருந்து வங்கிக்கான நட்டங்களை கோருவதற்கு நிராகரித்திருந்ததுடன் கடனை மீளழிப்பதற்கு வேண்டியிருந்ததுடன் (திறைசேரியின் பிரதி செயலாளரின் 2015 ஒக்தோபர் 26 ஆந் திகதிய எஸ்ஏ/ சீஎம் 7244 ஆம் கடிதத்தின் பிரகாரம்) திறைசேரி முன்காப்பீடு காலாவாகியிருந்ததுடன் அமைச்சரவை குறிப்பானையின் நிபந்தனைகளுடன் இணங்கியிருக்கவில்லை. ஆகையால், வங்கியானது கடனிடமிருந்து பாரிய நட்டத்தை ஏற்படுத்தியிருந்தது.

(vii) வங்கியானது 02 கடன் வசதிகளை கம்பனிக்கு வழங்கியிருந்ததுடன் பின்னர் இது செயற்பாடற்றதாக வகைப்படுத்தப்பட்டிருந்தது. 2015 ஒக்தோபர் 26 இல் உள்ளவாறான அத்தகைய வசதிகளின் ரூபா 478,351,989 (ரூபா 87,238,533 மூலதனத்தையும் ரூபா 391,273,456 வட்டி மற்றும் ஏனைய கட்டணங்களையையும் ஒன்று சேர்த்து) மொத்த நிலுவை மீதிகள் அறவிடப்படாமலிருந்தது. முன்னைய கடன்கள் 2000 யூன் 01 இலிருந்து செயற்பாடற்றதாகவிருந்த அதேநேரம் இரண்டாவது கடன் வங்கியால் வழங்கப்பட்டிருந்தது.

வங்கியானது வசதிகளற்கு எதிராக பிணையாக வர்த்தக் தாள்களை பெற்றிருந்ததுடன் கம்பனியானது கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தால் முடிவுறுத்தப்பட்டிருந்தது. ஆனால்இ வங்கியானது மேற்குறிப்பிடப்பட்ட நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு திருப்திகரமான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

**(ஈ) தலைமையலுவலக ii கிளையின் செயற்பாடற்ற கடன்கள்**

---

2015 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறான வங்கியின் கூட்டுறவு ii கிளையின் 163 வாடிக்கையாளர்களின் 305 கடன்களை உள்ளடக்குகின்ற செயற்பாடற்ற கடன்களின் மொத்த நிலுவை ரூபா 1,175 மில்லியனாகவிருந்ததது (ரூபா 284 மில்லியன் மூலதனத்தையும் ரூபா 891 மில்லியன் வட்டியையும் ஒன்று சேர்த்து). அத்தகைய கடன்களில் அதிகமானவை செயந்பாடற்ற வகைப்படுதத்லில் 15 வருடங்களுக்கு மேலதிகமாக இருந்ததென மேலும் அவதானிக்கப்பட்டது. இருந்தபோதிலும் அத்தகைய நிலுவை கடன்களை அறவிடுவதற்காக திருப்திகரமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 முகாமைத்துவ வினைத்திறமையீன்மைகள்

**மக்கள் வங்கியின் விதவைகள் ஓய்வூதிய நிதியத்தின் வருடாந்த பொதுக்கூட்டம்**

1965 இல் நிதியத்திற்கு பங்களிப்புச்செய்கின்ற முன்னைய ஊழியர் விதவைக்களுக்கான ஓய்வுவூதியம் மற்றும் வங்கியின் ஓய்வூதியம் பெற்ற ஊழியர்களின் ஓய்வூதியக் கொடுப்பனவிற்காக நிதியம் உருவாக்கபட்டிருந்தது. நிதியத்தின் உறுப்பினர்கள் அவர்களுடைய சம்பளத்தில் 5 சதவீதத்தை பங்களிப்பு செய்கின்றனர். நிதியத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த 13 வருடங்களாக நடைபெற்றிருக்கவில்லை.

## 4.5 செயற்பாட்டு வினைத்திறமையீன்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அ) வங்கியானது அதனுடைய கிளைகளை புனரமைப்பதற்காக 2009 இலிருந்து அதனுடைய மூலதன பாதீட்டில் ரூபா 1,602.49 மில்லியன் ஏற்பாட்டை செய்திருந்தது. எனினும், அத்தகைய வேலைகள் 2016 மார்ச் 02 வரையிலும் தொடங்கப்பட்டிருக்கவில்லை. அத்தகைய 28 செயற்திட்டங்களிற்கான 2009 இலிருந்து 2016 வரையிலான மொத்த எதிர்பார்க்கப்பட் செலவினம் ரூபா 3,045.55 மில்லியனாகும்.

ஆ) ரூபா 1,650,183,037 கிரயமான 10 கிளைகளை மற்றும் 03 ஏனைய செயற்திட்டங்களை ரூபா 314,626,352 மதிப்பிடப்பட்ட கிரயத்தில் நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தமானது கொள்வனவு நடைமுறையை பின்பற்றாமலும் ஒப்பந்தகாரர்களின் தொழில்சார் போட்டி மற்றும் முன்னைய செயன்முன்னேற்றங்களை பின்பற்றாமலும் வங்கியின் (பீபிள்ஸ் லீசீங் கம்பனியின் துணைக் கம்பனி ) உப துணைக்கம்பனிக்கு (வரையறுக்கப்பட்ட பீபிள்ஸ் லிசிங் பிறப்பற்றி டெவலப்மென்ற் கம்பனிக்கு (பிஎல்பிடிஎல்) வழங்கப்பட்டிருந்தது.
இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முடிந்த வேகைளின் சுயாதீன சான்றுபடுத்தல் இல்லாமலும் எந்தவித பிடிமானம் இல்லாமலும் ஒப்பந்தகாரர்களுக்கு ரூபா 1,650,183,037 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ii) பிஎல்பிடிஎல் ஆல் கையாளப்பட்ட செயற்திட்டங்களின் ஒரு சதுர அடிக்கான கிரயமானது வங்கியால் கையாளப்பட்ட செயற்திட்டங்கள் மற்றும் கைத்தொழில் நியமங்களின் ஒரு சதுர அடிக்கான கிரயத்தைவிட அதிகமாகவிருந்தது. பிலெ்பிடிஎல் ஆல் நிர்மாணிக்கப்பட்ட 10 கிளைகளின் ஒரு சதுரஅடிக்கான கிரயம் ரூபா 13,567 ஆகவிருந்ததுடன் வங்கியால் நிர்மாணிக்கப்பட்ட 09 கிளைகளிற்கான அரு சதுர அடிக்கான கிரயம் ரூபா 7,015 ஆகும்.

(iii) பிஎல்பிடிஎல் நிர்மாணிக்கப்பட்ட அனமடுவ மற்றும் பிலியந்தலவிலுள்ள கிளை இடங்களில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையில்இ பாரிய குறைபாடுகள் மிககுறுகிய காலத்தினுள் ஏற்பட்டிருந்தது என வெளிப்பட்டிருந்தது. மழைத்தண்ணீர் ஒழுக்கினால் அலுவலக கூரை சேதங்கள;, பாரிய சுவர் வெடிப்புக்கள், விளைவற்ற அலுவலக இடங்கள், மழை நாட்களின் போது முன் கண்ணாடிகளினுாடாக கட்டிடத்திற்குள் நீர் வருதல், உத்தியோகத்தர் மலசலகூடங்களின் சேதங்கள் மற்றும் கழிவகற்றல் குளியிலிருந்து நீர்வழிந்தோடல் என்பனவும் அவதானிக்கப்பட்டன.

(இ) வங்கியின் டியிற்றல்மயமாக்கல் செயற்திட்டமானது பிரதான வங்கியியல் முறைமையின் தற்போதைய வழங்குனர்களாகவுள்ள சில்வேர்க் கம்பனிக்கு முறையான கொள்வனவு நடைமுறையை பின்பற்றாமல் யூஎஸ்டி 11 மில்லியன் கிரயத்தில் 2015 ஆகஸ்ட் இல் வழங்கப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்திடமிருந்து வெளிவாரி நிபுணரின் உதவியுடன் செயற்திட்டத்தின் சாத்தியத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு முறையான சாத்தியவளக் கற்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.6 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

வங்கியானது 03 நிர்மாணச் செயற்திட்டங்களினது அத்தகைய செயந்திட்டத்தின் சாத்தியத்தன்மை முறையான மதிப்பிடாமையால் ரூபா 3,601,897 நானாவித செலவினத்தை ஏற்படுத்திய பின்னர் நிறுத்தியிருந்தமை குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும்இ வங்கியானது 03 கிளைகளை நிர்மாணிப்பதற்கு ஏற்கனவே தீர்மானித்தும் பாதீட்டும் இருந்தபோதும் பின்னர் செலவீனங்களானது ஓப்பீட்டளவில் அதிகமாக இருந்தமையால் ரூபா 1,575,147 நானாவித செலவினங்களை ஏற்படுத்திய பின்னர் தற்காலிகமாக பிடித்துவைப்பதற்கு தீர்மானித்திருந்தது. இதன் விளைவால் இந்தச் செலவினம் பயனற்றதாகவிருந்தது.

**4.7 விளைவற்ற சொத்துக்கள்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பின்வரும் காணிகள் விளைவற்றதாகவிருந்ததென அவதானிக்கப்பட்டது.

| இடம் | விபரம் | கொள்வனவு ஆண்டு | கிரயம் | மீள்மதிப்பிடப்பட்ட தொகை | விளைவற்ற காலம் |
|---|---|---|---|---|---|
| | | | ரூபா | ரூபா | வருடங்கள் |
| சிலாபம் | இலவசம் | 1979 | 22,500 | 10,000,000 | 36 |
| மஹற | இலவசம் | 1989 | 70,000 | 19,500,000 | 26 |
| கடவத்த ii | குத்தகை | 2012 | 18,500,000 | கிடைக்கப் பெற்றிருக்கவில்லை | 03 |
| சிறிவோபுற | குத்தகை | 2014 | 13,000,000 | -மேற்படி- | 01 |
| இமதுவ | குத்தகை | 2014 | 4,780,000 | - மேற்படி - | 01 |

**4.8 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

வங்கியானது 2012 ஒக்தோபர் மாதத்தில் வரையறுக்கப்பட்ட பீப்பிள்ஸ் லீசிங் புறப்பெற்றி டெவலப்மென்ற் கட்பனியிடமிருந்து கிளை அலுவலகத்திற்காக ரூபா 180,440,450 கிரயத்தில் தங்காலையில் காணி மற்றும் முன்னேற்றங்களை கொள்வனவு செய்திருந்தது. எனினும்இ கொள்வனவு செய்ததிலிருந்து 06 மாதங்களின் பின்னர் 2013 யூன் 30 இல் உள்ளவாறு மதிப்பீட்டுத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டில் ரூபா 110,440,450 ஆல் சொத்தின் பெறுமதியானது தீவிரமாக குறைவடைந்திருந்தது.

## 4.9 இனங்காணப்பட்ட நட்டங்கள்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டில் வங்கியானது கட்டிடமொன்றை மதிப்பீட்டறிக்கையில் குறிப்பிட்ட வாடகையை விட குறைந்த மாத வாடகையில் அறக்கட்டளைக்கு முறையான செய்முறைகளை பின்பற்றாமல் குத்தகைக்கு விட்டிருந்தது. ஆகையால், 2012 யூலை இலிருந்து 2016 யூலை வரையிலான காலப்பகுதிக்காக ரூபா 40,116,300 நட்டத்தை ஏற்படுத்தியிருந்தது.

(ஆ) நகர அபிவிருத்தி அதிகாரசபையானது (யூடிஏ) வங்கிக்கு அதனுடைய கிளைளை ஸ்தாபிப்பதற்கான சிறிபோபுற அம்பாந்தோட்டையிலுள்ள தன்னுடைய காணியில் ஒருபகுதியை 30 வருட குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு அனுமதியொன்றை வழங்கியது. வங்கியானது 2014 மார்ச் 19 இல் குத்தகை கட்டணத்தில் 50 சதவீதமாகவிருந்த ரூபா 14,857,024 (வரிகளை உள்ளடக்கி செலுத்தியிருந்தது. எவ்வாறாயினும், வங்கி மற்றும் யூடிஏக்கிடையில் எந்தவித உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. காணியின் அபிவிருத்தியானது காணியை கையளித்த திகதியிலிருந்து ஆறு மாதத்தினுள் ஆரம்பித்திருக்கப்பட்டு இரண்டு வருடங்களினுள் பூர்த்திசெய்யப்பட வேண்டியிருந்த போதிலும் வங்கியொன்று காணியின் அபிவிருத்தியை தொடங்கியிருக்காததுடன் இது விளைவற்றிருந்நததென அவதானிக்கப்பட்டது. வங்கியின் மீள்நிதியளிக்கப்பட்ட வைப்பிலிருந்து சிறிபோபுறவில் ஒதுக்கப்பட்ட காணி தொடர்பில் யூடிஏ வால் தீர்ப்பனவு செய்வதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 12,914,182 இறுதிக் கொடுப்பனவு கொழும்பிலுள்ள முன்னைய கார்தரிப்பிடத்திற்காக செலுத்தப்பட்டிருந்தது. ஆகையால், மேற்குறிப்பிடப்பட்ட அபிவிருத்தியின் தொடக்கம் ஐயத்திற்கிடமாகவுள்ளதென குறிப்பிடப்பட்டிருந்தது. வங்கியானது ருபா 27,771,206 நட்டத்தை ஏற்படுத்தக்கூடும்.

(இ) வங்கியானது வங்கியின் பொறியியல் சேவைகள் திணைக்களத்தின் சேவைகளைப் பெறுவதன் மூலம் 04 கிளைக் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு ஏற்கனவே தீரமானித்து பாதிடப்பட்டதுடன் பின்னர் ரூபா 10,725,573 இரட்டிப்பாக்கி ஏற்படுத்திய பின்னர் வரையறுக்கப்பட்ட பீப்பிள்ஸ் லீசிங் பிறப்பெற்றி அபிவிருத்திக கம்பனிக்கு (பீஎல்பீஎல்) ஒப்பந்தங்களை வழங்குவதற்கு தீர்மானித்திருந்தது என அவதானிக்கப்பட்டது. அதனால், வங்கியானது குறித்த செயற்திட்ட செலவினைத் தொடர்ந்து ரூபா 10,725,573 நட்டத்தை ஏற்படுத்தியிருந்தது.

## 4.10 வங்கியின் சந்தைப்பங்கு

வங்கித்துறையிலுள்ள வங்கியின் சந்தைப்பங்கு கடந்த 5 வருடங்களின் போது குறைவடைந்திருந்ததது. விபரங்கள் பின்வருமாறுள்ளன.

| விபரங்கள் | | வருடங்கள் 2015 | 2014 | 2013 | 2012 | 2011 |
|---|---|---|---|---|---|---|
| சொத்துக்கள் | சதவீதமாக | 14.6 | 14.7 | 15.7 | 17.1 | 15.6 |
| வைப்புச் சதவீதம் | சதவீதமாக | 16.6 | 16.9 | 18.3 | 18.9 | 17.9 |
| கடன்கள் மற்றும் முற்பணங்கள் | சதவீதமாக | 17.6 | 17.6 | 19.9 | 21.0 | 19.5 |

முன்னைய நான்கு காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டில் முக்கியமான வளர்ச்சி அடையப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

------------------------------------------------------------

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

-------------------------------------------------

வங்கியானது திட்டக்காலப்பகுதியின் போது அடையப்பட வேண்டிய இலக்குகள் மற்றும் அடைதல்களுடன் பதவியணி உறுப்பினர்களின் பொறுப்புக்களை தெளிவாக இனங்காண்பதன் மூலம் செயல்நடவடிக்கைத்திட்டமொன்றை வங்கி தயாரித்திருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது வங்கியானது அதனுடைய இலக்குகள் மற்றும் அடைதல்களை எந்த அளவுக்கு அடைந்துள்ளது என்பதை அளவிடுவதற்கு இயலாதிருந்தது.

### 5.2 கொள்வனவுத் திட்டம்

-------------------------------------

வங்கியானது பின்வரும் விடயங்களுடன் கொள்வனவுத் திட்டத்தை தயாரிக்காமல் முலதன செலவின் பாதீட்டை மாத்திரம் தயாரித்திருந்தது.

(i) கொள்வனவு முறைமைகள்
(ii) விலைக்கூறு ஆவணங்களை வழங்குவதற்கு பிரேரிக்கப்பட்ட திகதி
(iii) ஓப்பந்தங்களை வழங்குவதற்காக பிரேரிக்கப்பட்ட திகதி